[24th August 1970

பூந்தாழங்குடி துப்பாக்கிப் பிரயோகம்.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் 21—2—1968-ஆம் தேதி அன்று 35-ஆம் எண் வினாவிற்கு அளித்த விடையையொட்டி கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் —

(அ) பூந்தாழங்குடி துப்பாக்கிப் பிரயோகம் பற்றிய மன்னார்குடி கோட்ட ஆட்சியாளரின் (R. D. O.) விசாரணை அறிக்கை தமிழ் நாடு அரசுக்கு எப்பொழுது கிடைத்தது?

(இ) இவ்விசாரணை அறிக்கை சட்ட மன்ற அங்கத்தினர்களுக்கு எப்பொழுது வழங்கப்பட்டது?

(உ) அறிக்கை வழங்கப்பட்டதில் காலதாமதமிருப்பின், அதன் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) மன்னார்குடி, வருவாய்க் கோட்ட அதிகாரியின் அறிக்கை, 9—10—1967-ல் அரசுக்குக் கிடைத்தது.

(இ) சட்டமன்ற மேலவைத்துறை, இந்த அறிக்கையை 19—7—69-ல் அதன் உறுப்பினர்களுக்கு அனுப்பியது.

(உ) நீதிமன்றத்தில் இது குறித்த ஒரு வழக்கு முடிவுறாமல் இருந்தமையால், இந்த அறிக்கை நிறுத்தி வைக்கப்பட்டது. நீதிமன்றத்தில் வழக்கு எதுவும் முடிவுறாத நிலையில் இல்லாதபோது இந்த அறிக்கையை மேலவை முன் வைக்க, அரசு முடிவெடுத்தது. இந்த அறிக்கையின் முடிவான அச்சடித்த பிரதிகள் அரசுக்கு வரப்பெற்றதும் அவை, உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டன.

Prime Minister's Visit.

*3. *Q*. Thiru V. THANGAPANDIAN: Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) the total expenditure incurred when the Prime Minister Thirumathi Indira Gandhi toured in Tamil Nadu in the first week of October, 1969; and

(*b*) whether the Tamil Nadu Government have borne the entire expenditure?

இந்தியப் பிரதமரின் வருகை

திரு. வி. தங்கப்பாண்டியன்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் —

(அ) இந்திய பிரதமர் 1969 அக்டோபர் முதல் வாரத்தில் தமிழ் நாட்டில் சுற்றுப்பயணம் மேற்கொண்டபொழுது ஏற்பட்ட மொத்தச் செலவு எவ்வளவு?

(இ) தமிழ் நாடு அரசு இச்செலவு முழுவதையும் ஏற்றுக் கொண்டதா?

24th August 1970]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) ரூ. 1,98,524.53

(இ) இந்தியப் பிரதமர் உரையாற்றிய பொதுக் கூட்டங்களுக்காகச் செய்த ஏற்பாடுகளுக்கான செலவில் (பாதுகாப்பளிப்பதற்கு ஏற்பட்ட செலவும் 'சென்டேஜ்' கட்டணங்களும் நீங்கலான) ரூ. 53,696.00 செலவுத் தொகையை அரசிற்கு ஈடு செய்யுமாறு தமிழ்நாடு காங்கிரஸ் குழுவை அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

திரு. டி. கே. பொன்னுவேலு : தலைவர் அவர்களே, இந்தியப் பிரதம அமைச்சர் அவர்கள் இதற்கு முன்னாலும் தமிழகத்திற்கு வந்திருக்கிறார்கள். அப்படி வந்தபோதும் தமிழக அரசு இந்த வகையில் செலவழித்திருக்கிறது. அந்தப் பணத்தை தமிழக காங்கிரஸ்காரர்கள் திருப்பித் தந்துவிடுவதாகச் சொன்னார்கள். எனவே அந்தப் பணம் அரசாங்கத்திற்கு வந்துவிட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : 1967-ம் ஆண்டு தேர்தல் பிரச்சாரத்திற்காக இந்தியப் பிரதமர் அவர்கள் தமிழகம் வந்திருந்தபோது தர வேண்டிய பணம் ரூ. 75,715.00. இப்போது 1969-ல் இந்திய பிரதமர் பொதுக்கூட்டங்களுக்காக வந்தபோது தரவேண்டிய பணம் ரூ. 53,696 ஆக மொத்தம் ரூ. 1,29,411 அரசாங்கத்திற்குத் தரவேண்டும் என்று கோரி தமிழ்நாடு காங்கிரஸ் குழுவுக்கு ஒரு கடிதம் எழுதப்பட்டிருக்கிறது. இன்னும் அந்தப் பணம் கட்டப்படவில்லை.

திரு. வி. தங்கப்பாண்டியன் : தலைவர் அவர்களே, இந்த இரண்டு வருகையின் போதும் தமிழ்நாடு அரசு செலவழித்த தொகையைத் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியினர் இன்னமும் கொடுக்காமல் இருப்பதை முன்னிட்டு, இந்தத் தொகையை வசூல் செய்ய தமிழ்நாடு அரசு விரைவில் முடிவெடுக்குமா? அடுத்து, மத்திய அரசாங்கத்திலிருந்து பிரதமர் அவர்கள் ஒவ்வொரு மாநிலத்திற்கும் செல்கிறபோது பாதுகாப்புச் செலவு என்ற வகையில் ஏராளமான தொகை செலவாகிற காரணத்தால், மத்திய அரசாங்கமே அந்தச் செலவைப் பங்கிட்டுக் கொள்ளவேண்டுமென்று கோரி தமிழ்நாடு அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு ஒரு கடிதம் எழுதுமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இதைப் பற்றி இனிமேல்தான் யோசித்து முடிவெடுக்க வேண்டும்.

திரு. கே. ராஜாராம் : தேர்தல் நேரத்திலும், தேர்தலுக்கு முன்பும் இந்தியப் பிரதமர் அவர்கள் இங்கே வந்தது சம்பந்தமான செலவுத் தொகையை நிர்ணயிப்பதில் அரசாங்கத்திற்கும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்குமிடையே ஒரு முடிவெடுக்க இயலாத வகையில் வேறுபாடு இருப்பதன் காரணமாக மீண்டும் அந்தக் கணக்குகளுக்கான விவரம் கேட்டு அரசாங்கத்திற்குத் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி ஒரு கடிதம் அனுப்பியிருக்கிறது. மாநில அரசாங்கத்திலிருந்து தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்கு அந்த விவரங்கள் இன்னும் கொடுக்கப்படவில்லை. அதன் காரணமாகத்தான் அந்தக் கணக்கைத் தீர்ப்பதில் தாமதம் ஏற்பட்டிருக்கிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

[24th August 1970

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : 1967-ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்கான நேரத்தில் இந்தியப் பிரதமர் அவர்கள் கலந்து கொண்ட கூட்டங்களுக்கான மொத்தச் செலவு ரூ. 1,27,411-73 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பிறகு அதில் பாதுகாப்புச் செலவு, செண்ட்டேஜ் செலவு ஆகியவை போக மீதியைத்தான் தர முடியும் என்று தமிழ்நாடு காங்கிரஸ் குழு கூறியதற்கு இணங்க, பாதுகாப்பு வளையங்கள் போடுவதற்கு ஆன செலவு, செண்டேஜ் செலவு பாதுகாப்புச் செலவு இவைகள் எல்லாம் போக மீதி தரவேண்டிய தொகை ரூ. 73,715.73 என்று நிர்ணயிக்கப்பட்டது. இது 1967-ஆம் ஆண்டு பிரதமர் வந்தபோது ஏற்பட்ட செலவுத் தொகை. பிரதமர் அவர்கள் மீண்டும் வந்தபோது அதற்காக ரூ. 53,696 தரப்பட வேண்டும் என்று அரசாங்கத்திலிருந்து தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்குத் தெரிவிக்கப்பட்டது. இதை நினைவுறுத்தி 23-7-1970-ல் ஒரு கடிதம் தமிழ்நாடு காங்கிரஸ் குழுவுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

திரு. கே. ராஜாராம் : அதைக் குறிப்பிட்டுத்தான் நான் கூறுகிறேன். சட்டசபை எதிர்க்கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்கள் மூலமாகத் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியிலிருந்து ஒரு கடிதம் அரசாங்கத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னின்ன வகையில் கொடுப்பதற்கு ஒப்புக்கொள்ள இயலாது, இன்னின்ன வகையில் கொடுப்பதற்கு ஒப்புக் கொள்கிறோம் எனவே இந்தத் தொகையைச் சரியாக நிர்ணயித்து அனுப்ப வேண்டும் என்று கேட்டு அரசாங்கத்திற்குக் கடிதம் எழுதினோம். அதற்கு இது வரையிலும் அரசாங்கத்திலிருந்து பதில் வரவில்லை என்பது முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இப்படி ஒவ்வொரு முறையும் இந்தக் கேள்வி எழும் நேரத்திலெல்லாம் அரசாங்கத்திலிருந்து சரியான கணக்கு வரவில்லை என்று பதில் சொல்வது சரியானதல்ல. வேண்டுமானால் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களோடும், சட்டமன்ற எதிர்க் கட்சித் தலைவர் அவர்களோடும் நான் அமர்ந்து, இந்தக் கணக்கு விவரத்தைப் பற்றி ஒரு முடிவெடுத்து, மொத்தத் தொகை எவ்வளவு கொடுக்கப்பட வேண்டும் என்று ஒரு தொகையை அறுதியிட்ட பிறகு, அந்தத் தொகையைத் தருவது நல்லது என்று கருதுகிறேன்.

THIRU A. R. DAMODARAN : Sir, in view of the frequent controversy that arises regarding the expenditure incurred on the Prime Minister's visit and other Central Cabinet Ministers' visits during election time, would it be possible for the Chief Minister to evolve a convention that these people lay down office on the date of nomination, so that we need not fight over who has to expend the amount on their election visits?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இவைகளைப் பற்றியெல்லாம் ஆழ்ந்து யோசித்து அகில இந்திய ரீதியில் ஒரு முடிவெடுப்பது நல்லதாகும்.

திரு. எஸ். டி. ஆதித்தன் : தலைவர் அவர்களே, இந்தத் தொகையில் ஏதோ ஒரு பாகத்தையாவது ஒப்புக் கொண்டதாகத் தெரிகிறது. அப்படி ஒப்புக் கொண்ட தொகையாவது தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியிலிருந்து வசூலிக்கப்பட்டிருக்கிறதா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அந்தத் தொகைகூட வரவில்லை என்ற காரணத்திற்காகத்தான் கூடிப் பேசி முடிவெடுக்கலாம் என்று சொன்னேன்.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு: தலைவர் அவர்களே, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி ஒப்புக்கொண்ட பாகம் ஏதோ ரூ. 53,000 என்பது சரியல்ல. இந்தத் தொகை முடிவதற்கும் விவரங்கள் கேட்கப்பட்டிருக்கின்றன. அந்த விவரங்கள் இன்னும் கிடைக்கவில்லை என்றுதான் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். அது சரியா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: நான் கூடிப் பேசுவதாகச் சொன்னேன். திரு. நாயுடு அவர்கள் இப்போது விவரம் கேட்கிறார்கள். வேண்டுமானால் விவரத்தை அனுப்பி வைக்கிறோம்.

Cultivation of Banana.

* 4. *Q.*—THIRU R. KRISHNASWAMY NAIDU: Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state:

(*a*) whether there is any scheme for the cultivation of banana in the sandy area around Tuticorin harbour; and

(*b*) if so, the details thereof?

வாழைச் சாகுபடி

* திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு: மாண்புமிகு வேளாண்மை அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன —

(அ) தூத்துக்குடி துறைமுகப் பகுதியைச் சுற்றி மணலாகக் கிடக்கும் நிலப்பரப்பில் வாழை சாகுபடி செய்யும் திட்டம் ஏதேனும் உண்டா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) ஆம்.

(இ) இத்திட்டத்தின் கீழ் தூத்துக்குடி துறைமுகத்தின் 25 மைல் சுற்றளவுக்கு அமைந்த தேரி நிலங்கள் வாழை, நெல், நிலக்கடலை, காய்கறி முதலியவை பயிரிடுவதற்காகப் பண்படுத்தப்படும். இதற்காக 500 புதிய கிணறுகள் வெட்டவும் துளைக்கிணறுகள் அமைக்கவும் விசையேற்றங்கள் நிறுவி அவற்றிற்கு மின் இணைப்புக் கொடுக்கவும் பண்படுத்தப்பட்ட நிலங்களில் வண்டல்மண் அடிக்கவும் நிலங்களைச் சமன்படுத்தல், டிராக்டர்கள் பயன்படுத்தப்படுமிடத்து அவற்றை வாங்குதல் பரிந்துரைக்கப்பட்ட பயிர்களைப் பயிரிடுதல் போன்றவற்றிக்குக் கடன் வழங்க இத்திட்டம் வகை செய்கிறது.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு: தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்காக எடுத்துக்கொள்ளப்பட்ட நிலங்கள் அரசாங்கத்திற்குச் சொந்தமானவையா? விவசாயிகளுக்குச் சொந்தமானவையா? இவ்வாறு அந்த நிலங்களை வளப்படுத்துவதற்கு ஏக்கர் ஒன்றுக்கு எவ்வளவு செலவாகுமென்று திட்டமிடப்பட்டிருக்கிறது?